**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**EA.No.5/2025**

**in**

**EP.No.66/2024**

**in**

**OS.No.237/2021**

2025-ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 28-ம் நாளன்று மனுதாரர் / எதிர்மனுதாரர் சாட்சியாக ம.சா.1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.முத்தமிழ்செல்வி, இருக்கை எழுத்தர் நிலை 1 அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்.** | : | **நல்லம்மாள்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | | **வட்டம்** | : |
| **முகவரி** | : | | **மதம்** | : |
| **ஜாதி** | : | | **வயது** | : |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரரின் பொது அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

கடந்த 01.06.2023 ஆம் தேதிய பொது அதிகார ஆவணம் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1.ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.வ.எண்.131/2023 வழக்கின் பிராது அலுவலக நகல் ம.சா.ஆ.2.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.07.2025 ஆம் தேதிய வீரப்பகவுண்டரின் இறப்புசான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.07.2025 ஆம் தேதிய மருதாயி அம்மாளின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 15.07.1961 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் (எண்.2658/1961) ஜெராக்ஸ் ம.சா.ஆ.5.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 11.07.2025 ஆம் தேதிய மருதாயி அம்மாளின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.6.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 15.07.1961 ஆம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் (எண்.2653/1961) பதிவு நகல் ம.சா.ஆ.7.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 17.07.2025 ஆம் தேதிய முத்துகவுண்டரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் ம.சா.ஆ.8.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 18.01.2006 ஆம் தேதிய கிரைய ஆவணம்

(எண்.38/2006) சான்றிட்ட நகல் ம.சா.ஆ.9.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 21.02.2019 ஆம் தேதிய விடுதலை ஆவணம் (எண்.498/2019) பதிவு நகல் ம.சா.ஆ.10.ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.03.2022 ஆம் தேதிய விடுதலை ஆவணம் (எண்.1589/2022) ஜெராக்ஸ் ம.சா.ஆ.11.ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.11 ஆகிய ஆவணங்கள் புகைப்பட நகலாக இருப்பதால் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.)** மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.